ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்

சரித்திரம்

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

மஹான்கள் சரித்திரங்கள்

गुरुवंशकाव्यम्   १–७ सर्गाः   1—8—0

गुरुत्रयाष्टोत्तरशतनामस्तोत्रम्   0—4—0

Life of His Holiness Sri Sacchidananda
Siva Abhinava Narasimha Bharati
Swamigal, Jagadguru of Sringeri   1—8—0

The Greatness of Sringeri   0—10—0

Sri Jagadguru Sri Chandrasekhara Bharati
Swaminah—A short Life-Sketch   0—10—0

From the Master's Lips   1—8—0

ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யார் சரித்திரம் 1—0—0

ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகர பாரதீ
ஸ்வாமிகள் சரித்திரம்
(இரண்டாம் பதிப்பு) 0—10—0

" ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ
பாரதீ ஸ்வாமிகள் சரித்திரம் [In the Press

" நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள்
சரித்திரம்   0—6—0

ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள்
சரித்திரம்   1—0—0

ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதீ
ஸ்வாமிகள் சரித்திரம்   0—2—0

ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்
- - - - சரித்திரம்.

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்
இயற்றியது.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்
ஸ்ரீரங்கம்.

அணா 6] 1952. [தபால் வேறு

அட்டவணை.

படங்களின் விபரம்

உ

நுண்ணிய புத்தியாரும் நுட்பமில் புத்தியாரும்
நண்ணுதற் கரிய முக்தி நண்ணுறப் பாஷியாதி
எண்ணறு நூல்கள்தம்மை இயற்றிய சீரின்மிக்கோன்
தண்ணளி உடைய மேலோன் சங்கர பகவத்பாதன்.

வாரிதி சூழும் இந்த வையகத்து உள்ளார் உய்ய
சாரதைதன்னை வென்று ஸ்தாபித்தான் பீடம் ஒன்று
பூரண ஸ்வரூபன் அன்னாள் புகழ் திருவடிப்பூச்சூடில்
காரிருள் நீங்கி யாழும் கரையில் இன்பு எய்தலாமே.

—கோபால் சுப்பராய அய்யர்.



ஸ்ரீ சாரதாம்பா, சிருங்கேரி



ஸ்ரீ ஜகத்குரு நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள்

॥ श्रीगुरुभ्यो नमः ॥

ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளவர்கள் சரித்திரம்.

1. ஸ்ரீ சிருங்கேரி பீடம்.

ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாரவர்கள் புண்ய பூமியான இப்பரதகண்டத்தில் அவதரித்து வைதிக தர்ம மார்க்கத்தை நிலை நிறுத்தி அவைதிக மதங்களைக் கண்டித்து ஷண்மத ஸ்தாபனம் செய்து பகவத் பக்தியை நாடெங்கும் பரவச்செய்து ப்ரஸ்தானத்ரய பாஷ்யாதிகளையும் செய்து கொடுத்து அநுக்ரஹித்த விஷயம் யாரும் அறிந்ததே. அப்படியே நிலையாக அத்வைத ஸித்தாந்தம் பிரசாரமடைந்து கொண்டிருக்கவேண்டுமென்று ஸங்கல்பித்து நான்கு திக்குகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்து அவைகளில் தெற்கு திக்குக்காக கர்னாடக தேசத்தில் துங்காநதீக்கரையில் புராண பிரஸித்தரான ருஷ்ய சிருங்க மஹர்ஷியின் பிதாவான விபண்டக மஹா முனிவரின் ஆசிரமமான சிருங்கேரி என்ற ரமணீயமான புண்ய ஸ்தலத்தில் பிரஹ்மவித்யாஸ்வரூபிணீயான ஸ்ரீ சாரதாம்பிகையை பிரதிஷ்டை செய்து, அங்கு ஏற்படுத்தின மடத்தில் தன் முக்கிய சிஷ்யரான ஸ்ரீ ஸுரேசுவரா

சார்யாரை தனக்குப்பின் முதல் ஆசார்யாராக நியமனம் செய்ததும் பிரஸித்தமேயாகும். ஸ்ரீமத் ஆசார்யாரின் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீசாரதாம்பாளும் பரிபூர்ண கலையுடன் விளங்கிக்கொண்டு உலகத்தில் பக்தகோடிகளுக்கு அநுக்ரஹம் செய்துகொண்டு வருகிருள். இந்த தக்ஷிணாம்நாய வியாக்யான ஸிம்ஹாஸனத்திலும் ஸ்ரீ வித்யாசங்கரர், ஸ்ரீ வித்யாரண்யர், முதலான மஹான்கள் வீற்றிருந்து பீடாதிபத்யத்தை நாளதுவரை அவிச்சின்னமாய் நிர்வஹித்து வந்திருக்கிருர்கள். இப்பொழுது ஆசார்யஸ்தானம் வஹித்துவருகிற ஸ்ரீ சந்திரசேகர பாரதீஸ்வாமிகள் இப்பரம்பரையில் 34-வது பட்டமாகும். இவர்களுடைய குருநாதரே 33-வது பட்டம் வஹித்த ஸ்ரீஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள். அவர்களுடைய குருநாதரான 32-வது பட்டம் ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளைப்பற்றியே இச்சிறு கிரந்தம் வெளியிடப்படுகிறது.

2. பீடாதிபத்யம்.

ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் பிங்கள வருஷம் (1797) கார்த்திக சுக்ல சதுர்தசீ அசுவதி நக்ஷத்திரத்தில் அவதரித்தவர்கள். அவர்கள் ஜன்ம பூமியே சிருங்கேரிதான். பிரஹ்மசாரியாயிருக்கையில், இரண்டு தடவைகள் கால்நடையாகவே காசி யாத்திரை சென்று, பல பண்டிதர்களிடம் பல சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டார்கள். காசி க்ஷேத்ரத்தில் அதிப்பிரஸித்தராயிருந்த அஹோபல பண்டிதரின் சிஷ்யரான வாஞ்சேசுவர சாஸ்திரி

என்ற குட்டி சாஸ்திரிகளிடம் வேதாந்த சாஸ்திரம் கற்றதாயும் சிலர் சொல்லுகிறார்கள். இப்படி யாத்திரை முடிந்து சிருங்கேரிக்கு வந்திருந்த ஸமயம், அப்பொழுது பீடத்திலிருந்த ஸ்ரீ அபிநவ ஸச்சிதாநந்தபாரதி ஸ்வாமிகள் இவருடைய யோக்யதையைக்கண்டு ஸந்தோஷித்து, தனக்குப்பின் இவரே ஆதிபத்யம் வஹிக்கவேண்டுமென்று தீர்மானித்து, ஈசுவர வருஷம் (1817) பால்குன கிருஷ்ண பிரதமையில் இவருக்கு ஸந்யாஸம் கொடுத்துவிட்டு, ஷஷ்டி தினம் விதேஹ கைவல்யமடைந்தார்கள்.

இவ்விதம் எதிர்பாராமல் பீடாதிபத்யமும் கிடைத்து தன் குருவும் ஸித்தியடைந்ததால், ஆசிரம ஸம்பிரதாயங்கள் பீடத்திற்குரிய ஸம்பிரதாயங்கள் இவைகளைத் தெரிந்து கொள்வதற்கு ஸந்தர்ப்பமில்லை. அப்படியிருந்தும் விபரம் தெரிந்தவர்களிடமிருந்து எல்லாவற்றையும் அதிவிரைவில் கிரஹித்துக் கொண்டார்கள். தவிரவும், நல்ல பண்டிதர்களை வரவழைத்து, வேண்டிய வஸதி செய்துகொடுத்து, அவர்கள் மூலம் சாஸ்திர ஞானத்தையும் விருத்திசெய்து கொண்டார்கள். சாஸ்திர ஞானம் மட்டும் போதாதென்று நினைத்து, அதை அநுபவத்திற் கொள்ளக் கருதி, விசேஷமாக யோகாப்யாஸமும் தபஸும் செய்து அவற்றில் ஸித்திபெற்றார்கள். அவர்களின் யோக ஸித்தியும் மந்திர ஸித்தியும் எல்லையற்றதாயிருந்தது.

ஆஸ்திகர் அனைவரும் கிருதார்த்தராக வேண்டுமென்ற பரம கருணையால் ஸ்ரீஸ்வாமிகள் பலதடவை

ஆஸேது ஹிமாசல பரியந்தம் ஸஞ்சாரம் செய்து வர்ணா ஸிரம தர்மங்களில் விசேஷ ஊக்கமும் ஸன்மார்க்க அனுஷ்டானங்களும் ஏற்படும்படி போதித்து வந்தார்கள். இவர்கள் பீடாதிபத்யம் வஹித்த 62 வருஷ காலத்தில் 40 வருஷ காலம் ஸஞ்சாரத்திலேயே இருந்திருப்பதாகத் தெரிகிறது. தேவ பாஷையான ஸம்ஸ்கிருதம், தாய் பாஷையான தெலுங்கு, தேச பாஷையான கன்னடம், இவை தவிற தமிழ், மஹாராஷ்டிரம், ஹிந்துஸ்தானி, குஜராத்தி முதலான பல பாஷைகளிலும் நல்ல பரிசய முண்டு.

அந்தக் காலத்திலிருந்த மைசூர், திருவனந்தபுரம், புதுக்கோட்டை, பூனா பேஷ்வா, ஸிந்தியா, ஹோல்கார், கைக்வார் முதலிய ஸம்ஸ்தானங்களின் மன்னர்களும் ஜமீன்தார்கள் ஜாகீர்தார்களும் விசேஷ பக்தி சிரத்தையுடன் ஸ்ரீமத் ஆசார்யர்களை ஆராதித்து வந்தார்களென்றும் வர்ணாசிரம ஆசார பரிபாலன விஷயத்திலும் மிகவும் அநுகூலப்படுத்தினார்களென்றும் அக்காலத்திய சாஸனங்களாலும் பத்திரிகைகளின் மூலமாகவும் தெரிய வருகிறது.

நமது ஆசார்யார் தனது 40வது வயதிலிருந்து காய் கிழங்குகளை ஆஹாரமாக வைத்துக் கொண்டார்கள். அதிலும், காலக்கிரமத்தில், பாகல்காயை மட்டும் உபயோகித்து வந்தபடியால், 'பாற்காய் ஸ்வாமிகள்' என்று பிரஸித்தி ஏற்பட்டது. ஆஹாரத்தைப்போல் நித்திரையையும் ஜயித்தவர். பிரதிதினமும் இருபது மணிநேரம்

மந்திர ஜபம், தேவதாராதனை, தியாக நிஷ்டைகளில் ஈடுபட்டிருப்பது ஸஹஜமாய்விட்டது. ஸ்வாமிகள் நித்திரை செய்ததை யாரும் பார்த்ததில்லை.

பங்களூர் விஜயம் செய்திருந்த ஓர் ஸமயம், இவர் மஹிமையைக் கேள்வியுற்ற ஓர் ஐரோப்பியர் (மைசூர் ஸமஸ்தானம் கமிஷனர், பௌரிங் என்பவர்) முன் தகவலின்றியில் நள்ளிரவில் ஸ்ரீ ஆசார்ய ஸந்நிதானத்தை அடைந்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் அந்த நடுநிசியிலும் வெகு உத்ஸாஹத்துடன் ஸ்ரீ சந்திர மௌளீசுவர பூஜையிலீடுபட்டிருந்ததைக் கண்டு வியந்து, அவரது உள்ளம் கனிந்து உருகி, பல கடிதங்கள் மூலம் தன் பக்தியைத் தெரிவித்திருக்கிறார். ராத்திரி பூஜா திரவியங்கள் ஸித்தமானவுடன், சிப்பந்திகளின் அசக்தியை முன்னிட்டு அவர்களை அனுப்பிவிட்டு ஸ்வாமிகள் ஏகாந்தமாயிருந்து ஸாவகாசமாய் பூஜாதிகளை நடத்துவார்.

3. ஸத்யஸங்கல்பம்.

ஸ்ரீ ஸ்வாமிகள் தான் ஸங்கல்பித்த ஒவ்வொரு கார்யமும் நடந்தே தீர வேண்டுமென்ற ஸ்வபாவமுள்ளவர். இந்த அம்சத்தை மைசூர் மஹாராஜா மும்மடி ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் ஸ்ரீ ஸ்வாமிகள் பேரில் செய்திருக்கும் அஷ்டோத்தரசத நாமாவளியில் **प्रतिज्ञातार्थ-साधकः** என்ற நாமாவினால் எடுத்துக் காட்டியிருக்கிறார். வயதான பிறகு இவருக்கு கொஞ்சம் காது கேட்கிற சக்தி குறைந்தபோது இவரே விளையாட்டாக சொல்வாராம்,

"நான் சொல்வதை எல்லாரும் கேட்கவேண்டும். மற்ற வர்கள் சொல்வது என் காதில் விழாது" என்று. இவ் விஷயத்தில் இன்னொரு ஸம்பவமுமுண்டு. மஹாராஜா மேலேகண்ட அஷ்டோத்தர சத நாமாவளியை ஆசார்யா ரிடம் ஸமர்ப்பித்தபோது அவர்கள் எவ்வித அபிப்பிராய மும் சொல்லாமலிருக்க, மஹாராஜா வற்புறுத்தியதின் பேரில் நன்றாயில்லை யென்று ஜாடை காட்டினார். மஹா ராஜாவுக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டு "குறைகளைச் சொன்னால் திருத்திக்கொள்கிறேன்" என்றார். அதற்கு ஆசார்யார் "இந்த ஸ்தோத்ரம் எனக்கு என்று எழுதும் போது எனக்கு அஸாதாரணமாக இருக்கும் லக்ஷணத் தைப்பற்றி ஒரு நாம போட வேண்டாமா?" என்று கேட் டார்கள். "என்ன நாம? உத்தரவானால் சேர்த்துக்கொள் கிறேன்" என்று மஹாராஜா சொன்னதும் ஆசார்யார் "சொல்கிறேன், ஆனால் நீங்கள் சேர்க்க மாட்டீர்கள். 'चण्डीश्वरकृपालब्धबाधिर्यपरिभूषितः சண்டிகேசுவரருடைய கிருபையால் கிடைத்த செவிட்டுத்தனத்தினால் அலங்கரிக் கப்பட்டவர்' என்று இருந்தால் எனக்குத்தான் இந்த ஸ்தோத்ரம் என்று நன்றாக விளங்கும்" என்று புன்சிரிப் புடன் சொன்னார்கள்.

ஒரு ஸந்தர்ப்பத்தில், "நாளை மத்யானம் பன்னிரண்டு மணிக்கு ஸ்ரீ சந்திர மௌளீசுவரர் யாத்திரை புறப் படுகிறார்" என்று சொல்லிவிட்டார்கள். "அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய அவகாசமில்லையே" என்று நிர்வாஹஸ்தர்கள் சொன்னதற்கு, "உங்கள் இஷ்டம்"

என்று சொல்லிவிட்டு, ஸ்வாமிகள் மறுநாள் குறித்த நேரத்தில் ஸ்ரீ சந்திர மௌளீசுவரரை தன் கைகளி லெடுத்துக்கொண்டு மடத்தைவிட்டுப் புறப்பட்டுப் பாத சாரியாகவே வெகுதூரம் சென்றுவிட்டனர். மேனு பல்லக்கு போகிகள் பரிவாரங்கள் மற்ற ஸம்பாரங்களெல் லாம் தயாராகிப் பின்னால் போய்ச் சேரவேண்டியதுதான்!

அவ்விதமே, யாத்ரா காலங்களில் ஸ்வாமிகள் நிறுத்தச்சொன்ன இடங்களில் நிறுத்திவிட வேண்டும். அது நடுநிசியாயிருந்தாலும் சரி, நடுக் காடாயிருந்தாலும் சரி. பூனைப்பக்கம் யாத்திரை போய்க்கொண்டிருக்கை யில், ஒருநாள் மத்தியானம் பூஜையை முடித்துக்கொண்டு அன்று ஸாயங்கால ஆஹ்நிகத்திற்கு அடுத்த ஊர்போய் சேர்ந்துவிடலாமென்று ஏற்பாடாயிருந்தது. புறப்படும் போதே நேரமாய்விட்டது. இரண்டு ஊர்களுக்கும் மத்தியில் ஒரு பெரிய காடு. அதில் துஷ்ட மிருகங்கள் தவிர, திருடர் பயமும் அதிகம். ஸ்ரீஸ்வாமிகள் அந்தக் காட்டு மத்தியில் போய்க்கொண்டிருக்கையில், ஆஹ்நிக காலம் வந்துவிட்டதால் ஓர் ஓடையின் ஸமீபத்தில் தங்கி கிரமப்படி ஸ்நானாதி ஆஹ்நிகங்களை முடித்து, ஸ்ரீ சந்திர மௌளீசுவர பூஜையை ஆரம்பித்து, அபிஷேகாதி களாகி அலங்காரமாகிற ஸமயம், திடீரென்று திருடர்கள் தோன்றி சூழ்ந்துகொண்டு விட்டார்கள். ஆயினும் பூஜை பூர்த்தியாகும் வரை கிட்ட வரவில்லை. ஸ்ரீமடம் பரிவாரங்களெல்லாம் பயந்து நடுங்கினர். ஸ்ரீஸ்வாமிகள் பூஜை முடிந்து யதிருச்சையாய்த் திரும்பிப் பார்க்கையில்

திருடர் கோஷ்டி கறுப்புக் கம்பளிகள் போர்த்திக் கொண்டு ஆயுதபாணிகளாக நிற்கக் கண்டனர். "நீங்கள் எங்கே வந்தீர்கள்?" என்று ஸ்வாமிகள் கேட்டதற்கு, தலைவனொருவன் "திருடவே வந்தோம். நீங்கள் ஸந்யாஸி. உங்களுக்கு இந்த தங்க ஆபரணங்களெல்லாம் எதற்கு? எங்களிடம் கொடுத்துவிடுங்கள். இல்லையானால், நாங்கள் பலாத்காரம் செய்யும்படி ஏற்படும்" என்றான். "ஸ்ரீ சந்திர மௌளீச்வரர் ஸொத்தல்லவா இவைகள்? இவைகளை நீங்கள் எடுத்துக்கொள்ள முடியாதே" என்று ஸ்ரீஸ்வாமிகள் சொல்லவும். "இல்லை, பரவாயில்லை. நாங்கள் வாங்கிக்கொள்கிறோம். எடுத்துக்கொடுங்கள்" என்றான். கம்பளியைக்கீழே விரிக்கச் சொல்லி ஸ்ரீ சந்திர மௌளீச்வரருக்கு அலங்கரித்திருந்த ஆபரணங்களையும் ஸ்வர்ண கவசம் ரத்னங்கள் எல்லாவற்றையும் கழற்றி அந்தக் கம்பளியில் போட்டு, "முடிந்தால் எடுத்துக் கொண்டு போங்கள்" என்று ஸ்ரீஸ்வாமிகள் சொல்லி நிறுத்தினார்கள். அந்தத் திருடன் கம்பளியுடன் ஆபரணங்களைத் தூக்க யத்தனித்ததில் மிகவும் கனமாகயிருக்கக்கண்டு ஆச்சரியமடைந்தான். பிறகு கம்பளியின் நாலு மூலைகளையும் நாலுபேர் பிடித்துத் தூக்கியும் பார்த்தனர். அதுவும் முடியவில்லை. எப்படியாவது தூக்கி விடுவதென்று மூச்சை அடக்கிக்கொண்டு தூக்கினார்கள். கம்பளி கிழிந்துபோய் கையுடன் வந்துவிட்டது. ஆபரணங்கள் போட்ட இடத்திலேயே கிடந்தன. கம்பளி தீப்பிடித்துக் கறுகியிருக்கக் கண்டு திருடர்களுக்கு பீதி ஏற்பட்டுவிட்டது. ஸ்ரீஸ்வாமிகளின் பாதங்களில் தண்

டாகாரமாய் விழுந்து காப்பாற்ற வேணுமென்று முறையிட்டனர். "ஸ்ரீ சந்திர மௌளீச்வரர் திருடர்களுக்கும் யஜமானர் அல்லவா? 'तस्कराणां पतिः, स्तेनानां पतिः' என்றல்லவா பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்? அவர் விஷயத்தில் யாரும் அபசாரம் செய்யக்கூடாது" என்று சொல்லி, ஸ்ரீஸ்வாமிகள் அவர்களுக்கு அபயம் கொடுத்தனர். அந்தத் திருடர்களும் நன்றியறிவுடன் அன்றிரவு பூராவும் காவலாகக் காத்திருந்து மறுதினம் காலையில் அடுத்த ஊர்வரை கூடவே வந்து, ஸ்ரீஸ்வாமிகளைப் பலவாருகப் பணிந்து போற்றி விடைபெற்றுச் சென்றனர்.

மற்றொரு ஸமயம் லிங்காயத்தார் மூலம் உபத்ரவம் ஏற்பட்டது. தாங்கள் வீரசைவர் என்று சொல்லிக்கொண்டு, மற்ற மத ஸம்பிரதாயமுடையோரிடம் துவேஷபுத்தி கொள்வது அவர்கள் இயல்புபோலும். ஸ்ரீஸ்வாமிகள் ஸஞ்சாரக் கிரமத்தில் லிங்காயத்தார் வசிக்கும் ஓர் கிராமத்தின் பக்கமாகப் பல்லக்கில் போய்க்கொண்டிருந்தார்கள். லிங்காயத்தார் பலர் ஒளிந்திருந்து, பல்லக்கின் பேரிலும் பரிஜனங்கள் மேலும் கற்களை எறியத் தலைப்பட்டனர். "கல் எறிகிறார்களே" என்று பரிஜனங்கள் பதறினர். நன்ருய் எறி[ரி]யட்டும்" என்று ஸ்ரீஸ்வாமிகள் சொல்லி வாய்மூடுமுன், அந்த கிருமத்து வீடுகளில் தீப்பற்றியது. பெரியோருக்கு அவ்வித ஸங்கல்பமில்லாவிடினும் அவ்வாக்கு பலித்து விட்டது. இதுவே ஸத்யநிஷ்டையின் லக்ஷணமென்று பெரியோர் சொல்கிருர்கள்.

ஸ்ரீமத் ஆசார்யார் ஏதேனும் ராஜாவின் ஸம்ஸ்தா

னத்திற்குப் போவதாயிருந்தால் அந்த அரசர் கோட்டை வாசலுக்கு வந்து எதிர்கொண்டழைத்து ஸ்ரீஸ்வாமிகள் ஏறியிருக்கும் பல்லக்கைத் தூக்குகிற பாவனையாகப் பிடித்துக்கொண்டு கொஞ்சதூரம் வருகிற ஸம்பிரதாயமுண்டு. இவர் மத்யமாகாணம் ராஜதானியான நாகப்பூருக்கு விஜயம் செய்த ஸமயம் அப்போதிருந்த அரசர் இந்த ஸம்பிரதாயப்படி நடக்காததால் ராஜதானிக்கு வெளியில் காமடீலஷ்கர் என்ற இடத்தில் தங்கி ஸ்ரீமடத்தின் செலவிலேயே ஸகல கார்யாதிகளையும் நடத்தினார்கள். "மஹாராஜாவுக்கு கோட்டை வாசலுக்கு வரமுடியவில்லையோ? அப்படியே யிருக்கட்டும்" என்று இவர்கள் சொன்னதாகவும் அதுமுதல் மஹாராஜாவுக்கு சரீரத்தில் பலவித தொந்தரவு ஏற்பட்டு வெளியில் போகமுடியாத ஸ்திதி ஏற்பட்டதாகவும் வேறு பல விதங்களிலும் கஷ்டங்கள் ஏற்பட்டதாகவும் தெரிகிறது. இவையெல்லாம் ஸ்ரீமத் ஆசார்யாருக்குச் செய்த அபசாரத்தினால் தான் ஏற்பட்டவையென்று அம்மஹாராஜாவிற்குத் தென்பட்டு மிகவும் பச்சாத்தாபத்துடன் ஸ்ரீஸ்வாமிகளிருக்கும் ஸ்தலத்திற்கு கால்நடையாக வந்து சரணமடைந்தார். ஆசார்யாரும் மஹாராஜரின் ப்ரார்த்தனைக்கு இணங்கி ஏற்பட்ட ஸம்பிரதாயப்படி நாகப்பூருக்கு விஜயம் செய்து அந்த ராஜனுக்கு அநுக்ரஹம் செய்தார்கள்.

இவர்கள் 1838 விளம்பி வருஷத்தில் ராமேசுவரம் விஜயம் செய்தார்கள். போகும்போது தக்ஷிண தேசத்தில் காளஹஸ்தி, திருப்பதி, காஞ்சீ, சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம் வழியாக ஸஞ்சாரம் செய்திருப்பதா

கத்தெரிகிறது. திருப்பதியில் இவர்கள் செய்திருக்கும் ஸ்ரீ வெங்கடேச ஸ்துதியில் दारिद्र्यं मम दुष्टभृत्यजनितं என்று சொல்லியிருப்பதால் ஸ்ரீமடம் சிப்பந்திகளில் சிலர் நம்பிக்கைக்கு லாயக்கில்லாமலிருந்து திரவிய நஷ்ட மேற்படுத்தி யிருப்பார்களென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ராமேசுவரம் ஆலயம் வடபக்கத்தில் கோடி தீர்த்தம் என்ற ஒரு தீர்த்தமிருக்கிறது. யாத்திரையாக வருகிறவர்கள் பல தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்தபிறகு, இந்தக் கோடிதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து அந்த தீர்த்தத்தில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு தங்கள் ஊருக்குக் கொண்டுபோய் கோடிதீர்த்த ஸமாராதனை யென்று ஸமாராதனை செய்வார்கள். இந்த தீர்த்தத்திற்கு ராமேசுவரத்திலுள்ள ஆர்ய பிராஹ்மணர் என்ற ஓர் வகுப்பார் கதவுபோட்டு பூட்டி வைத்துக்கொண்டு ஒரு குடம் தீர்த்தத்திற்கு மூன்று பைசா வீதம் வாங்கிக்கொண்டு அவர்களே ஜலத்தை எடுத்து யாத்திரிகர்களுக்கு ஸ்நாநம் செய்விப்பார்கள். ஸ்ரீஸ்வாமிகள் விஜயம் செய்த ஸமயம் அவர்களுக்கும் அப்படியேதான் செய்வோமென்று பிடிவாதம் செய்தார்கள். உடனே ஸ்ரீஸ்வாமிகள் ஆலயத்திற்குத் தென்புறத்திலுள்ள ஸர்வதீர்த்தத்திற்கு வந்து "கோடி என்கிற எண்ணிக்கை கணக்கில் அகப்பட்டுவிட்டது. கணக்கில் அகப்படாத இந்த ஸர்வ தீர்த்தமே மேலானது. இதில் ஸ்நாநம் செய்தால் எல்லா தீர்த்த ஸ்நாந பலன்களும் ஏற்படும். அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டார்கள். அதுமுதல் எல்லா ஜாதி ஜனங்களும் கோடிதீர்த்தத்தையே திரஸ்

கரித்து விட்டார்கள். ஆர்ய பிராஹ்மணர்கள் நிந்தைக்கு உள்ளானதுடன் அநேக விதமான கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிட்டது. குரு சாபத்திற்குட்பட்டவர்களென்று அவர்களிடம் புரோஹித கார்யத்தையும் அநேகர் நிறுத்திவிட்டார்கள். கோடி தீர்த்தமும் கெட்டுப்போய் உபயோகமற்ற நிலைமையை அடைந்துவிட்டது. 35 வருஷங்களுக்குமேல் இப்படியே அனுஷ்டானம் ஏற்பட்டுவிட்டது. மறுதடவை ஸ்ரீஸ்வாமிகள் தக்ஷிண தேச யாத்திரையாகப் புறப்பட்டு வந்திருந்த ஸமயம் 1873 ஸ்ரீமுக வருஷம் இந்த ஆர்ய பிராஹ்மணர்கள் மதுரைக்கு வந்து முன் தாங்கள் செய்த அபசாரத்தை மன்னித்து இனிமேலாவது தங்களை அநுக்ரஹித்துக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கிசைந்து ஸ்ரீமத் ஆசார்யார் ராமேசுவரம் போய் ஸகலகார்யங்களையும் முடித்துக்கொண்டு ஸர்வ தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து அந்த தீர்த்தத்திலிருந்து தன் கமண்டலுவில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு வந்து கோடி தீர்த்தத்தில் சேர்த்து, பிறகு அக் கோடி தீர்த்தத்திலிருந்து பரிஜனங்களைக் கொண்டு தீர்த்தத்தை எடுப்பித்து ஸ்நாநம் செய்ததுடன் சிஷ்ய ஜனங்களையும் ஸ்நானம் செய்ய ஆக்ஞாபித்தார்கள். அதுமுதல் அந்த கோடி தீர்த்தத்திற்கு முன்னிலும் அதிகமான மஹிமை ஏற்பட்டுவிட்டது.

ஸ்ரீமத் ஆசார்யார் 1872 ஆங்கிரஸ வருஷத்திலேயே மதுரைக்கு வந்துவிட்டார்கள். மதுரையில் வழக்கம் போல் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் தேவாலயம் கல்யாண

மண்டபத்தில் ஜாகை வைத்துக்கொண்டிருந்தார்கள். பூர்வ ஆசாரணையை முன்னிட்டு கர்ப்ப கிருஹம் சென்று ஸ்ரீ மீனாக்ஷியம்மனுக்கு அர்ச்சனைசெய்ய யத்தனிக்கையில் சில அர்ச்சகர்கள் ஆக்ஷேபித்தனர். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் இரண்டு தேங்காய்கள் கொண்டுவரச் சொல்லி அதில் அம்மனுடைய கலையை ஆகர்ஷணம் செய்து கொண்டு இருப்பிடத்திற்கு வந்து அத்தேங்காய்களை வைத்து நியமத்துடன் பூஜை நைவேத்யம் செய்து எல்லா ஜனங்களுக்கும் மடத்திலேயே பிரஸாதம் கொடுத்து அநுக்ரஹித்தார்கள். அதுமுதல் ஆலயத்தில் அர்ச்சகர் மூலமாய் நிவேதனம் செய்து பிரஸாதம் பெற்றுக்கொள்ள கூடாதென்று ஸ்ரீமத் ஆசார்யாருடைய உத்தரவை அநுஸரித்து எல்லா ஜனங்களும் ஆலயத்திற்கு வெளியில் பலிபீடத்திற்கு ஸமீபத்தில் நின்றுகொண்டு தாங்களே தேங்காய் உடைத்து நைவேத்யம் செய்து கர்ப்பூர ஹாரத்தி செய்து தூரத்திலிருந்து நமஸ்காரம் செய்துவிட்டு வர ஆரம்பித்தார்கள். பின்னால் சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜாயிருந்து மிகவும் கியாதிபெற்ற டாக்டர் ஸர் S. ஸுப்ரஹ்மண்ய அய்யர் அக்காலத்தில் மதுரையில் பிரஸித்த வக்கீலாக இருந்தார். அவரே ஸ்ரீமத் ஆசார்யாரின் ஆக்ஞையை அநுஷ்டானத்திற்கு கொண்டுவரும் விஷயத்தில் முதன்மையாயிருந்தார். மஹா தபஸ்வியான ஸ்ரீமத் ஆசார்யாரிடம் அபசாரம் செய்த அர்ச்சகர்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் உண்டாயின. பெரியோர்கள் சபிக்கமாட்டார்கள். அவர்களுக்குச் செய்த அபசாரமே சாபமாய் மாறிவிடும். कृत्वा सतां हि संतापं शापं देहीति नो वदेत् ॥

இவ்விதம் சிரமங்கள் ஏற்பட்ட பிறகு அவ்வர்ச்சகர்கள் ஸுப்ரஹ்மண்ய அய்யர், அவர் சிறிய தகப்பனர் சங்கரய்யர் முதலான ப்ரமுகர்களை ஆச்ரயித்துக்கொண்டு ஸ்ரீஸ்வாமிகள் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த இடத்திற்குப்போய்ப் பணிந்து தங்கள் அபசாரத்தை மன்னித்து அநுக்ரஹிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். பக்தஜனங்களுக்கு அதீனராகவும் கருணாமூர்த்தியாகவுமுள்ள ஸ்ரீமத் ஆசார்யார் மறுபடியும் மதுரைக்கு விஜயம்செய்து வழக்கம்போல் தானே ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர்களுக்கு விசேஷ பூஜாதிகள் செய்து மிகுந்த ஸந்தோஷத்துடன் மறுபடியும் பூர்ண கலையை ஏற்படுத்தி "இனி கிரமமாய் எல்லா ஜனங்களும் அர்ச்சகர் மூலமாகவே பூஜை செய்வித்து பிரஸாதம் பெறலாம்" என்று ஆக்ஞாபித்தார்கள். இவ்வாசார்யார் எந்த தினத்தில் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர்களின் கலையை தேங்காயில் ஆகர்ஷணம் செய்து கொண்டுவந்து தம் பூஜையில் வைத்து பூஜை நடத்த ஆரம்பித்தார்களோ அன்று முதல் இப்பொழுதும் அந்த தேவதைகளையுத்தேசித்து ஸ்ரீ சந்திர மௌளீசுவரர் பூஜா காலத்தில் பிரதிதினமும் மஹா நிவேதனம் ஸ்ரீ சிருங்கேரி மடத்தில் நடந்து வருகிறது.

இவர்கள் ஸஞ்சார காலத்தில் ஒரு கிராமத்திற்கு விஜயம் செய்வதாய் ஸ்ரீமுகம் அனுப்பப்பட்டது. அந்த கிராமத்தில் தனிகர் ஒருவர் புதியதாக வீடுகட்டி கிருஹப் பிரவேசம் செய்யும் காலத்திலேயே ஒரு பிரஹ்மரக்ஷஸும் பிரவேசம் செய்துகொண்டதாக அநேக காரணங்களால்

யஜமானனுக்கு நிச்சயமுண்டாகி அந்த பிரஹ்மரக்ஷஸின் உபத்திரவம் தாங்கமுடியாமல் வேறு கிராமத்தில்போய் குடியிருந்துவந்தார். ஸ்ரீஸ்வாமிகள் மூலமாக இந்த தொந்திரவை நிவிருத்தி செய்துகொள்ள அவருக்கு உத்தேசம். ஆனல் சொல்லவும் தைரியமில்லாமல் கிராமத்தார்களின் ஸஹாயத்தின்பேரில் விஷயத்தை மறைத்து ஸ்ரீஸ்வாமிகளுடைய ஜாகைக்காக இவ்வீட்டையே ஸித்தப்படுத்திக் கொடுத்தார். ஸ்ரீஸ்வாமிகளுக்காவது அவர்கள் பரிஜனங்களுக்காவது அந்த வீட்டிலுள்ள உபத்திரவ விஷயம் தெரிவதற்கு இடமில்லே. ஸ்ரீஸ்வாமிகள் கிரமப்படி அங்கே வந்து இறங்கி நடு ராத்திரியில் ஏகாந்தத்தில் பூஜை செய்துகொண்டிருக்கும் ஸமயம் மடத்தைச் சேர்ந்த ஒரு வித்வானுடைய வஸ்திரங்களே யணிந்து ஸால்வையைத் தோளில் போட்டுக்கொண்டு தூணில் சாய்ந்துகொண்டிருந்த ஒரு மனித ரூபத்தைக் கண்டார்கள். மடத்து வித்வான்தான் என்று நினைத்து உட்காரும்படி ஜாடை காட்டியும் உட்காராமலிருந்ததிலிருந்து ஆசார்யார் ஸந்தேஹம் கொண்டு உற்றுப் பார்த்ததில் விஷயம் தெரிந்தது. உடனே தன் வலது கையில் கொஞ்சம் தீர்த்தம் எடுத்து நரஸிம்ஹ மந்திரத்தினல் அபிமந்திரணம் செய்து அந்த ரூபத்தின்பேரில் புரோக்ஷணம் செய்தார்கள். அது அந்த தேஜஸ்ஸைப் பொறுக்கமுடியாமல் "எரிகிறதே, எரிகிறதே" என்று உறக்க சப்தமிட்டுக்கொண்டு ஓடிப்போய் அந்த வீட்டின் பின்பக்கமுள்ள கிணற்றில் பாய்ந்து விழுந்தது. இந்த சப்தத்தைக் கேட்டு, படுத்திருந்த ஜனங்கள்

திகிலடைந்து வந்து பார்க்க யாரையும் காணவில்லை. கிணற்றில் வஸ்திரங்களும் ஸால்வையும் மிதக்கக் கண்டார்கள். இவ்வாச்சர்யத்தைப் பற்றி மடத்து ஜனங்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு வீட்டு யஜமானன் ஸ்ரீஸ்வாமிகளிடம் வந்து நமஸ்கரித்து வாஸ்தவத்தைத் தெரிவித்தான். அவர்கள் மிகுந்த தயையுடன் "இன்று உங்கள் தொந்தரவு நீங்கிவிட்டது. இனி பயப்படவேண்டாம். இது முதல் பயமன்னியில் இங்கேயே வாஸம் செய்யலாம்" என்று அநுக்ரஹித்தார்கள். இவ்விதமாக இவ்வாசார்யாரின் நிக்ரஹானுக்ரஹ ஸாமர்த்தியம் அதி பிரஸித்தமாயிருந்து வந்தது.

4. ஸ்ரீ மடம் அபிவிருத்தி.

ஸ்ரீ ஸ்வாமிகளவர்களுக்கு அனுகூலமான நல்ல பரிஜனங்கள் இல்லாமலிருந்தாலும் தன்னுடைய அபாரமான யோக்கியதையினாலும் சக்தியினாலும் ஸம்ஸ்தானத்தின் கீர்த்தியை மிகவும் பரவும்படி செய்தார்கள். ஸம்ஸ்தானத்திற்கு பல விதங்களில் சொத்துக்களும் வருமானங்களும் ஏற்படுத்தினார்கள். விலை மதிக்க முடியாத அநேக ரத்நாபரணங்களை சேகரித்தார்கள். வித்வான்களுக்கும் ஆச்ரித ஜனங்களுக்கும் சிருங்கேரியில் ஜீவனத்திற்காக இனாம் ஸர்வ மானிய விருத்திகளையும் ஏற்படுத்தி போஷித்தார்கள். மஹாராஜாக்களிடமிருந்தும் இதர பிரபுக்களிடமிருந்தும் காணிக்கைகளும் வருஷ வருமானங்களும் கிடைத்தன. குவாலியர் ஸம்ஸ்தானாதிபதி ஜயாஜிராவ் ஸிந்தியா அவர்கள் வருஷம் ஒன்றுக்கு

ரூ. 500-ம், இந்தூர் மஹாராஜா துக்கோஜி ராவ் ஹோல்கார் அப்படியே ரூ. 200ம், அக்கல்கோடு ஷஹாஜி ராஜா பான்ஸ்லே ரூ. 150-ம், தார் ஸம்ஸ்தானத்தைச்சேர்ந்த யசுவந்தராவ் போவர், ஹைபட் ராவ் போவர் இவர்கள் சேர்ந்து ரூ. 100-ம், சாசுவதமாய் வருஷந்தோறும் கொடுப்பதாக ஏற்பாடு செய்தார்கள். 1827-28ல் மைஸூர் விஜயம் செய்த ஸமயம் மைஸூர் மஹாராஜா அவர்கள் பெலவாடி முதலிய மூன்று கிராமங்களை ஸர்வ மான்யமாக தானம் செய்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் சாம ராஜ நகரம் வழியாக சிருங்கேரிக்குத் திரும்பிப்போகும் போது சாமராஜேசுவரஸ்வாமிக்கு ஒரு ரதம் செய்து அர்ப்பணம் செய்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் உத்தர தேச யாத்திரை போய் வெகுநாளாக தகவல் தெரியாமலிருந்த ஸமயம் மைஸூர் கிருஷ்ணராஜ மஹாராஜா விக்ஞாபன பத்திரிகைகள் மூலம் பல தடவை பிரார்த்தித்துக்கொண்டதற்கு இசைந்து மைஸூர் திரும்பி வந்து தர்சனம் கொடுத்தநுக்ரஹித்தார்கள். அந்த ஸமயம் மஹாராஜாவுக்கு சிவகீதை உபதேசம் செய்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தனக்குள்ள பக்தியையும் நன்றியையும் காட்டுவதற்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 12000 கொடுத்து வருவதாக ஏற்றுக்கொண்டார். மைஸூர் ஸம்ஸ்தானத்திற்கும் சிருங்கேரி பீடத்திற்குமுள்ள ஸம்பந்தம் வெகுநாள்பட்டதுடன் வெகு நெருங்கியதும் கூட என்ற விஷயம் யாவரும் அறிந்ததே.

5. சிஷ்ய பரிக்ரஹம்.

ஸ்ரீஸ்வாமிகளவர்கள் தனக்கு ஆசிரம ஸ்வீகார மான ஆருவது தினத்திலேயே தன் குரு விதேஹ முக்தியடைந்து விட்டபடியால் தனக்கேற்பட்ட அஸௌ கர்யங்களை நினைத்து, தான் த்ருடமாயிருக்கும்போதே யோக்கியரான சிஷ்யரை பரிக்ரஹம் செய்து அவருக்கு ஆசிரம ஸம்பிரதாயங்களையும் ஸம்ஸ்தான ஸம்பிரதாயங் களையும் நன்கு தெரிவித்து வித்யாப்யாஸமும் கிரமமாய் நடத்தி ஸம்ஸ்தானத்தின் ஆதிபத்தியத்திற்குத் தகுந்தவ ராகும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணம் ஸ்ரீஸ்வாமி களின் 60வது வயதில் ஏற்பட்டது.

அந்த ஸமயம் மைசூர் ஸம்ஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானுயிருந்து குனிகல் சதகோடி ராம சாஸ்திரிக ளென்று அதிபிரஸித்தராயிருந்தவர் தன் குமாரன் பால னை லக்ஷ்மீ நரஸிம்ஹ சாஸ்திரிகளுடன் ஸ்ரீஸ்வாமிகளை தர்சிக்க வந்தார். அவருடைய யோக்கியதையைப் பற்றி ஸ்ரீஸ்வாமிகளுக்கு முன்னமேயே நன்ருகத் தெரியும். பையனுடைய புத்திசாலித்தனத்தையும் பாண்டித்தியத் தையும் பிரஹ்மதேஜஸையும் பார்த்து மிகவும் ஸந்தோ ஷித்தார்கள். இவர்கள் தன் ஸந்தோஷத்தைக் காட்டின மாதிரியில் இப்பையனை மடத்திற்கு அபேக்ஷிப்பார்க ளென்ற எண்ணம் ராம சாஸ்திரிகளுக்கு ஏற்பட்டு, அதற் கிடமில்லாமல் செய்யக் கருதி ஊருக்குத் திரும்பி வந்த வுடன் பையனுக்கு விவாஹம் செய்து வைத்து விட்டார். அதற்கு சில நாள் கழித்து ராம சாஸ்திரிகளின் பார்யை

கர்ப்பவதியானள். இந்த ஸமாசாரம் சிருங்கேரிக்கு எட்டியவுடன் ஸ்ரீஸ்வாமிகளவர்கள் "ராம சாஸ்திரி இப்பொழுது என்ன செய்வார்?" என்று கேட்டார்கள். இதிலிருந்தே ஸத்ய ஸங்கல்பர்களான ஸ்ரீமத் ஆசார்யருடைய தீர்மானம் நன்கு தெரிகிறது. வயதானபிறகு ஏற்பட்ட இந்த கர்ப்பத்தில் புத்திரனே ஜனிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ராம சாஸ்திரிகள் இப்பொழுது இக்குழந்தையை உத்தேசித்து மிக சிரத்தையுடன் பும்ஸவனமும் செய்தார். அப்படியே பெரியோர்கள் ஸங்கல்பப்படி புத்திர ஜனனமும் ஏற்பட்டது. "சிவஸ்வாமி" என்று பெயரிடப்பட்ட இக்குழந்தையும் கிரமப்படி வித்வான்களாலும் மஹாராஜ குடும்பத்தார்களாலும் லாலிக்கப்பட்டு வளர்ந்துவந்தது. இரண்டாவது வயதில் ராம சாஸ்திரிகளும் ஐந்தாவது வயதில் அவர் பார்யையும் காலமான பிறகு இந்த பாலன் தமயனர் லக்ஷ்மீநரஸிம்ஹ சாஸ்திரிகளின் ஸம்ரக்ஷணையிலேயே இருந்து வந்தான். எட்டு வயது பூர்த்தியாயிற்று. அந்த ஸமயம் ஸ்ரீஸ்வாமிகள் ஒருநாள் ராத்திரி ஏகாந்தத்தில் இருக்கும்போது ஒரு ஸுமங்கலீ தோன்றி "ஸ்தலம் விடு" என்று சொன்னதாகத் தோன்றிற்று. சிஷ்ய பரிக்ரஹத்திற்காக சிருங்கேரியை விட்டுப் புறப்படும்படி அம்பாள் உத்தரவாயிருக்கிறதாகத் தெரிந்துகொண்டு மறுதினமே ஸ்ரீ சாரதாம்பாள் ஸன்னிதியில் விசேஷ பூஜைகளை வெகு ஸாவகாசமாய் செய்து பிரார்த்தனை செய்துகொண்டு கால்நடையாகவே சிருங்கேரியை விட்டுப் புறப்பட்டு அங்கிருந்து ஒருமைல் தூரத்திலுள்ள ஸச்சிதாநந்தபுரம் என்ற அக்ர

ஹாரம் வந்தார்கள். பிறகு யாத்திரைக்கு வேண்டிய ஸௌகர்யங்கள் ஸித்தமானவுடன் அங்கிருந்து புறப்பட்டு மைசூர் ராஜதானிக்கு வந்து சேர்ந்தார்கள். வந்தவுடன் மஹாராஜா மூலமாக லக்ஷ்மீநரஸிம்ஹ சாஸ்திரிகளுக்கு சொல்லியனுப்பி சிவஸ்வாமியைத் தன்னிடம் வரவழைத்து பார்வையிட்டு மிகவும் ஸந்தோஷித்து பாலகரை தன் ஸமீபத்தில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு "உனக்கு என்ன வேண்டும்?" என்று மிக ஆதரவுடன் கேட்டார்கள். இதற்கு பதில் வேறு எந்த வார்த்தையும் சொல்லாமல்,

अयं दानकालस्त्वहं दानपात्रं
भवानेव दाता त्वदन्यं न याचे ।
भवद्भक्तिमेव स्थिरां देहि मह्यं
कृपाशील शम्भो कृतार्थोऽस्मि तस्मात् ॥

என்ற சிவபுஜங்க ஸ்தோத்திரத்திலுள்ள சுலோகத்தைச் சொன்னவுடன் ஸ்ரீமத் ஆசார்யருக்கு ஏற்பட்ட ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. பிறகு மஹாராஜாவினுடைய விசேஷ பிரயத்தனத்தினாலும் ஸ்ரீமத் ஆசார்யாருடைய ஸங்கல்பத்தினாலும் லக்ஷ்மீநரஸிம்ஹ சாஸ்திரிகளிடம் சிரமப்பட்டு ஸம்மதி வாங்கி அக்ஷய (1866) ஆஷாட சுத்த ஷஷ்டி தினம் சிவஸ்வாமிக்கு ஸன்யாஸாசிரமம் கொடுத்து ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள் என்ற யோக பட்டத்துடன் சிருங்கேரி பீடத்தில் அபிஷேகம் செய்துவைக்கப்பட்டது. மைசூரில் சில நாள்



மைசூர் மஹாராஜா
மும்மடி கிருஷ்ணராஜ உடையார்



ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதாநந்த சிவ அபிநவ
நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்

தங்கி விட்டு ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு ஸமீபத்திலுள்ள பச்சிமவாஹினீ என்ற ஸ்தலத்தில் காவேரீ தீரத்தில் சின்ன ஸ்வாமிகளுடன் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் வியாஸ பூஜை முதலான ஆசிரம தர்மங்களை அனுஷ்டித்தார்கள்.

6. சிஷ்யருடன் சிருங்கேரி வருகை.

சாதுர்மாஸ்யம் பூர்த்தியானவுடன் சின்ன ஸ்வாமிகளையும் அழைத்துக்கொண்டு யாத்திரைக்கே ஆரம்பித்துவிட்டார்கள். நஞ்சன்கோடு, சாமராஜநகரம் வழியாக கணவாய் இறங்கி கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, செங்கல்பட்டு, மதராஸ், வடஆர்காடு, கடப்பை, கர்நூல் முதலான ஜில்லாக்களில் சுமார் பன்னிரண்டு வருஷகாலம் ஸஞ்சாரம் செய்து ஈசுவர வருஷம் ஆஷாட கிருஷ்ண த்விதீயை (27—7—1877) சுக்கிர வாரத்தன்று சிருங்கேரிக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள். இதுவே சின்ன ஸ்வாமிகள் முதல்தடவை சிருங்கேரிக்கு விஜயமாவதால் ஜனங்கள் அதி உத்ஸாஹத்துடன் வரவேற்றார்கள். பெரிய ஸ்வாமிகளைத் தங்கப் பல்லக்கிலும் சின்ன ஸ்வாமிகளை வெள்ளிப் பல்லக்கிலும் அலங்கரித்து பட்டணப் பிரவேசம் கோலாஹலமாய் நடந்தது. இதில் ஒரு விசேஷ ஸம்பவம் குறிப்பிட வேண்டியதுண்டு. அக்ரஹார மத்தியில் ஊர்வலம் வந்துகொண்டிருக்கையில் சின்ன ஸ்வாமிகளவர்கள் மனதில் தன்னைத் தெரியாமலே "நாமும் தங்கப் பல்லக்கில் ஏறக்கூடிய காலம் வரும்" என்று ஒரு விருத்தி க்ஷணிகமாய்த் தோன்றி மறைந்தது.

ஊர்வலம் முடிந்து மடத்து வாசலில் பல்லக்குகள் இறங்கினவுடன் சின்ன ஸ்வாமிகள் இறங்கிவிட்டார்கள். பெரியவர் பல்லக்கிலிருந்தபடியே சின்ன ஸ்வாமிகளை கூப்பிட்டு விட்டு "தங்கப் பல்லக்கில் ஏறவேண்டுமென்று தோன்றிற்றோ?" என்று கேட்டார்கள். சின்ன ஸ்வாமிகள் திடுக்கிட்டு "அப்படித் தோன்றவில்லை. நானும் ஏறும் காலம் வரும் என்று தோன்றிற்று" என்று சொன்னார். அதற்கு பெரிய ஸ்வாமிகள் "தங்கப் பல்லக்கில் வெறுமனே ஏறிவிடலாமென்று நினைக்காதே" என்று சொல்லிவிட்டு பக்கத்திலிருந்த உக்கிராணத்திலிருந்து கொஞ்சம் நெல் கொண்டுவரச் சொன்னார்கள். நெல் வந்தவுடன் அதில் ஒரு பிடி கையில் எடுத்துக்கொண்டு தங்கப் பல்லக்கிலிருந்து இறங்கி தான் உட்கார்ந்திருந்த இடத்தில் அந்த நெல்லைத் தெளித்தார்கள். அது உடனே பொரியாக மாறிவிட்டது. "பார்த்தாயா? தங்கப் பல்லக்கில் ஏறவேண்டுமானால் இவ்வளவு தபஸ் ஏறவேண்டும். ஸாமான்யமாய் உட்கார்ந்துவிடலாமென்று நினைக்காதே" என்று சொன்னார்கள். இதிலிருந்து முன்னைவிட பெரிய ஸ்வாமிகளிடம் சின்னவருக்கு பயமும் பக்தியும் ஏற்பட்டதுடன் தானும் பீடாதிபத்தியத்திற்கு தகுந்த தபோபலம் ஸம்பாதிக்கவேண்டுமென்ற ஊக்கம் அதிகப்பட்டது.

சிருங்கேரிக்குத் திரும்பிவந்து சிலநாட்களுக்குள், அப்பொழுது மைசூர் மஹாராஜா கிருஷ்ணராஜ உடையாரவர்களின் குமாரர் சாமராஜ உடையாருக்கு ஸ்ரீமத் ஆசார்யாருடையவும் சின்ன ஸ்வாமிகளுடையவும் தர்சன

மும் பரிசயமும் ஏற்படுத்திவைக்க வேண்டுமென்று அவர் தாயார் மஹாராணி ஸீதா விலாஸ தேவாஜ அம்மணி யவர்கள் நினைத்து சிருங்கேரிக்கு விக்ஞாபனப் பத்திரிகை அனுப்பினுள். அதற்கிசைந்து இரு ஆசார்யார்களும் பகுதான்ய வருஷத்தில் மைசூருக்கு விஜயம் செய்து அவர்களை அநுக்ரஹித்து விட்டு சிருங்கேரிக்குத் திரும்பினுர்கள். அப்பொழுது பெரிய ஸ்வாமிகளுக்கு 80 வயதுக்கு மேலும் சின்ன ஸ்வாமிகளுக்கு 20 வயதுக்கு மேலும் இருக்கும்.

யாத்திரையிலேயே பன்னிரண்டு வருஷகாலமிருந்துவிட்டபடியால் சின்ன ஸ்வாமிகளுடைய வித்யாப்யாஸம் பூராவும் யாத்திராகாலத்திலேயே ஏற்படும்படி ஸம்பவித்தது. தகுந்த வித்வான்களைக்கொண்டு வித்யாப்யாஸம் செய்துவைத்ததுடன் தானே அநேகமாய் கவனித்து சாஸ்திரங்களையும் ஆசாரங்களையும் ஸம்பிரதாயங்களையும் போதித்து வந்தார். சின்னவருடைய சரீர ஸம்ரக்ஷணையிலும் மனப்பரிபாக விஷயத்திலும் பெரிய ஸ்வாமிகள் எடுத்துக்கொண்ட அக்கரைக்கு கணக்கேயில்லை.

7. விதேஹ முக்தி.

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுக்கு 82 வயதாகும் தருணம் வந்ததும் சரீரத்தில் தளர்ச்சி மிகவும் ஏற்பட்டுவிட்டது. இராக்காலத்தில் ஒருநாள்கூட தவருமல் தானே செய்து வந்த ஸ்ரீசந்திரமௌளீசுவரர் பூஜையை சிஷ்ய ஸ்வாமி

களே நடத்தும்படி ஏற்பட்டது. யோகத்தில் மிகவும் பயிற்சி செய்து எண்பது ஆஸனங்களுக்கு மேல் போடக் கூடியவர். அவர்களுடைய அஷ்டோத்தரசத நாமாவளி யில் மஹாராஜா கிருஷ்ணராஜர் अष्टाङ्गयोगनिष्णातः என்பது டன் अशीतिसंख्यदुस्साध्ययोगासनविशारदः என்று ஒரு விசேஷணமும் கொடுத்திருக்கிறார். சரீரத்தில் பலம் குறைந்தாலும் மனோபலமாவது ஆத்மசக்தியாவது குறை யாமலே யிருக்குமாதலால் இவர்கள் பத்மாஸனம் முதலிய ஆஸனங்கள் போட்டுக்கொண்டு தியான ஸமாதியி லேயே இருந்துவிடுவார்கள். ஒரு ஸமயம் அவர் சரீ ரத்தை மறந்திருந்தபோது பக்கத்திலிருந்த சின்ன ஸ்வாமிகளுக்கு “ஆசார்யருடைய பாதாரவிந்தமே ஸகல விதமான சிரேயஸ்ஸுக்கும் காரணமல்லவா? அதைத் தொட்டு கண்ணில் ஒத்திக்கொள்ளவேண்டும்” என்று மனதில் ஒரு விருத்தி தோன்றினவுடன் ஆசார்யருடைய யோக நிஷ்டையை கலைக்காமல் மிருது வாக தன் கையினால் அவர்களுடைய பாதத்தை ஸ்பர்சித் தார். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் தன் பாதத்தை இழுத் துக்கொண்டு “என்ன செய்தாய்?” என்று அதட்டிக் கேட்டார்கள். சின்ன ஸ்வாமிகள் தனக்கு ஏற்பட்ட மனோவிருத்தியை சொல்லிவிட்டு அபசாரமாயிருந்தால் மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு ஆசார் யார் “ஆமாம், அபசாரம்தான். இனிமேல் தொடாதே, நீ தொட்டால் எனக்கு நெருப்புமாதிரி சுடுகிறது” என்றார்கள். இதிலிருந்து சின்னவரிடம் எவ்வளவு தபோ மஹிமை ஏற்பட்டிருந்ததென்றும் அவரிடம் பெரி



ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதாநந்த சிவ அபிநவ
நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்



ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதாநந்த சிவ அபிநவ
நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்

யவர் எவ்வளவு கௌரவ புத்தி வைத்திருந்தாரென்றும் புலப்படுகிறது.

சரீரம் மிகவும் தளர்ச்சியடைந்த ஸமயத்திலும் கோகர்ணம்போய் ஸ்ரீமஹாபலேசுவரரை தர்சித்துவர வேண்டுமென்ற எண்ணம் ஆசார்யாருக்கு இருந்து வந்தது. ஆனால் அவர்களுடைய வயதையும் சரீர ஸ்திதியையும் கவனிக்கும்போது அந்த ஸங்கல்பத்தை நிறைவேற்றிக் கொடுக்க யாருக்கும் தைர்யமில்லாமலிருந்தது. இப்படியிருக்க, ஒருநாள் இரவில் ஸ்ரீமத் ஆசார்யார்,

"கோகர்ணத்திலிருந்து நம்மை அழைத்துக்கொண்டு போவதற்கு பிராஹ்மணர்கள் வந்திருக்கிறார்கள். புறப்படுவதற்கு மேனாப் பல்லக்கு ஸித்தமாகட்டும்" என்று சொன்னார்கள். இவர் இவ்விதம் சொன்னது ஸ்வப்ன பாஷணமா, புத்தி சக்திக்கு குறைவேற்பட்டு வந்த வார்த்தையா, என்று பக்கத்திலுள்ளவர்கள் நினைக்கும்படி இருந்தது. சில நிமிஷங்கள் சென்று,

"மேனா ஸித்தமாகிவிட்டதா? அதில் நம்மை உட்கார வையுங்கள்" என்று சொன்னார். பிறகு சுமார் ஒரு மணி நேரம் கழித்து,

"இதென்ன ஆச்சர்யம்? இவ்வளவு வேகமாய் நம்மை கோகர்ணத்திற்கு அழைத்துக்கொண்டு போய் திருப்பி அழைத்து வந்துவிட்டார்களே நம் பல்லக்கு போகிகள்? நல்ல ஸாமர்த்தியசாலிகள். அவர்களுக்கு

இனும் கொடுங்கள்" என்றார். இதன் பிறகு அவர்கள் பேசவேயில்லை. மறுநாள் அதாவது பிரமாதி வருஷம் ஜ்யேஷ்டசுத்த த்விதீயை (23—5—1879) சுக்கிரவாரம் காலை 9 மணிக்கு ஸ்ரீமத் ஆசார்யார் பாஞ்சபௌதிக சரீரத்தை விட்டு விதேஹ கைவல்யத்தை யடைந்தார்கள். அந்த முந்தின நாள் ராத்திரி கோகர்ணத்திலுள்ள சிருங்கேரி மடம் அதிகாரியும் அங்கே தேவ பூஜை செய்கிறவருமான கோபால சாஸ்திரிகள் நித்திரை செய்யும் போது ஸ்வப்நத்தில், தான் கோகர்ணம் மஹாபலேசுவரர் தேவஸ்தானத்தில் இருந்ததுபோலவும் அவ்விடத்திற்கு ஸ்ரீஸ்வாமிகளவர்கள் பல்லக்கில் வந்ததுபோலவும் தான் ஸம்பிரமத்துடன் எழுந்து நமஸ்கரித்து நிற்க தன் யோக க்ஷேமங்களை விசாரித்துவிட்டு அதிவேகமாய் மஹாபலேசுவரர் ஸன்னிதிக்குப் போய் பூஜைசெய்து கர்பூர நீராஜனம் செய்தார் போலவும் கண்டார். இவ்விஷயம் கேட்போர் யாவருக்கும் ஆச்சர்யத்தை யுண்டுபண்ணிற்று. ஸத்யஸங்கல்பம் என்பதை ஆசார்யார் கடைசிவரையில் காட்டினுரென்பது நன்கு தெரிகிறது.

இந்த ஸமயம் சின்னஸ்வாமிகளவர்களுக்கு வயது இருபத்திரண்டு. தன்னை பால்ய வயதில் வரவழைத்துக் கொண்டு பதிமூன்று வருஷகாலம் ஒரு தினமாவது இடைவிடாமல் கூடவே வைத்துக் கொண்டு ஆதரித்து விருத்திக்கு கொண்டுவந்த குருநாதர் சரீரவியோகமடைந்ததும் தாங்கமுடியாத துக்கம் ஏற்பட்டது. தானுக ஸமாதானம் செய்துகொள்ளவும் முடியவில்லை. மற்றவர்கள்

ஸமாதானப்படுத்தவும் முடியவில்லை. எப்படியும் கொஞ்சம் தைர்யத்தை அவலம்பித்துக் கொண்டு மேல் நடத்த வேண்டிய ஸம்ஸ்காரங்களை கூட விருந்து நடத்தினுர்கள். எல்லாம் முடிவதற்கு அர்த்தராத்திரி ஸமயமாகி விட்டது. அன்று பூராவும் ஆஹாரம் இல்லை. நித்திரையும் வரவில்லை. தன் குருநாதரையே நினைத்து நினைத்து அவர் குணங்களை சொல்லிக் கொண்டும் அம் மஹான் தன் விஷயத்தில் காட்டிவந்த பிரீதியையும் அநுக்ரஹத்தையும் பற்றி பலவிதமாய் நினைத்து பிரலாபித்துக் கொண்டும் இருந்தார். அந்த ஸமயம் கொஞ்சம் பிரக்ஞாபங்கம் ஏற்பட்டபோது, தான் குருநாதரைக் கண்டு நமஸ்கரித்தது போலவும் அவர்கள் "இது என்ன இது? பெண்டுகளைப்போல் அன்னம் ஜலம் இவைகளை விட்டு அழுவது எதற்காக? நாம் எங்கே போய்விட்டோம்? இங்கேயே இருக்கிறோமே?" என்று கர்ஜித்துக்கொண்டு சொன்னதாகவும் தோன்றிற்று. இதைக்கேட்டு, சரீரத்திலிருக்கும்போது பரிச்சின்னமாயிருந்தவர், இப்பொழுது வியாபகராயிருக்கிறுரென்ற தீர்மானம் ஏற்பட்டு தைர்யத்தையடைந்து, தானே ஸமாதானம் செய்துகொண்டார்கள். பிறகு சிஷ்யர்களின் வேண்டுகோள்படி இவர்களுக்கு வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் மறுபடியும் பட்டாபிஷேக மஹோத்ஸவம் நடத்தப்பட்டது. இவர்களுடைய விசேஷமான குருபக்தியும் அதனுல் அவர்கள் அடைந்த லோகோத்தரமான நிலையும் பீடத்தை அலங்கரித்த சோபையும் சிஷ்யர்களுக்கு பலவிதமான அநுக்ரஹங்களைச் செய்த ரீதியும் அத்யாதிருசமாயிருந்ததென்

பதை யாரும் அறிவார்கள். இவ்விரு மஹான்களைப் பற்றி ஸ்மரிப்பதே மஹத்தான புண்யமாகும்.

कामादिसर्पव्रजभञ्जकाभ्यां
विवेकवैराग्यनिधिप्रदाभ्याम् ।
बोधप्रदाभ्यां द्रुतमोक्षदाभ्यां
नमो नमः श्रीगुरुपादुकाभ्याम ॥

[भक्तिसुधातरङ्गिणी-पुटं २०९.